# ஜெப விண்ணப்பங்கள்




1. தண்டலம் சபையில் 28.9.2014 அன்று ஞானஸ்நானம் பெற்ற 6 பேர் விசுவாசத்தில் வளர.
2. பெனலூர் கிராமத்தில் சந்திக்கப்பட்ட பிள்ளைகள் மற்றும் தாய் மார்களுக்கவும் அங்கு நடைபெற்ற சுவிசேஷப் பணிக்காவும்.
3. நம் சபையில் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தப்படுபவர்கள் இரட்சிப்பின் நிச்சயம் பெறவும், விசுவாசத்தில் பெலப்படவும், சாட்சியாய் வாழவும்
4. 12.10.2014ல் நடைபெறும் பன்பாக்கம் சபை ஆண்டு விழாவிற்காகவும், சபையார் ஊழியங்களில் வளரவும் மற்றும் சமூக நல பணிகளுக்காக
5. மதுரவாயல் சபையார் ஐக்கியப்பட்டு உழைக்கவும் சாட்சியைக் காத்துக் கொள்ளவும், பிரிவினை காரியங்கள் அகற்றப்படவும்
6. கீழ்முதலம்பேடு ஆலயபணி முழுமையாக முடிக்கப்பட தேவையான உதவிகள் கிடைக்க
7. செல்வி எஸ்தர் ஜெபபிரியாவின் மரணத்தால் பாதிக்கப்பட்டுள்ள திரு மகேந்திரன் குடும்பத்திற்கு தேவன் ஆறுதலையும் சமாதானத்தையும் அருள.
8. செல்வி வைலட் ஆபிரகாம் மறைவினால் வாடும் குடும்பத்திற்கு தேவன் சமாதானத்தையும் ஆறுதலையும் தந்தருள.
9. சுகவீனமாயிருக்கும் மூத்தவிசுவாசி திரு A.N. ஜியார்ஜ், திருமதி சந்திர மோசஸ், திரு ரூபன், திரு ஏனோக் ஆகியோருக்கு கர்த்தர் பெலனளிக்க.
10. திருமதி அஸ்வின்க்கு கர்த்தர் சுகபெலன் தர.
11. திருமதி இந்திரா பெர்னார்ட் கால் முட்டு வலியிலிருந்து சுகம் பெற.
12. தமிழக ஆட்சியாளர்களுக்காவும் சமூக அமைதிக்காவும்.
13. குடும்ப முகாமில் கலந்துக்கொண்ட குடும்பங்கள் சாட்சியாக வாழவும், கற்றுக்கொண்ட காரியங்களில் உறுதியாக நிலை நிற்கவும், பிள்ளைகளை கடவுளுக்குள்ளாய் வழி நடத்த பெற்றோர்களுக்கு ஞானத்தை அருள.
14. சபையாக நாம் அன்பிலும், பரிசுத்தத்திலும், தேவபயத்திலும், விசுவாசத்திலும், சத்தியத்திலும் சாட்சியாக வளர ஜெபிப்போம்.

# தமிழ் பாப்திஸ்து சபை, கீழ்ப்பாக்கம்

சென்னை – 600 010.

மலர் 19 | ஜெப செய்தி மடல் | அக்டோபர் 2014 | இதழ் 10



## போதகரின் பகுதி

**உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக யோ: 14 : 1, 2**

மனித உணர்ச்சிகளில் முதன்மையானதும், கடுமையானதும் நம்மை அடிமைப்படுத்தி அழிப்பது பயமே! மனிதனாக வாழுகிற ஒவ்வொரு வனுக்கும் ஏதாவதொரு பயம் இருக்கும். நாம் சந்திக்கக் கூடிய எதிர்பாராத சூழ்நிலைகள், நிகழ்ச்சிகள், மனிதர்கள் மற்றும் மூடநம்பிக்கைகள் நம்மைப் பயமுறுத்தி அடிமைப்படுத்தக்கூடும். ஆதாம் பூரணமனிதனாக அன்பிலும், பரிசுத்தத்திலும் நல்லுறவிலும் கடவுளுடன் வாழ்ந்து வந்தான். ஆனால் கடவுளின் கட்டளையை மீறின உடனே அவனுக்குள் வந்த முதல் தீய உணர்வு பயமே. ஆதியாகமம் 3:10 ஆகையினால் இந்த உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் பயம் என்கிற உணர்வோடே பிறக்கிறது. தொடர்ந்து உலகின் நிகழ்வுகளினால் பய உணர்ச்சியே குழந்தைக்குள் வளர்கிறது. இந்த பயத்தின் ஒரு பகுதியே கவலை, மனசோர்வு, மனஅழுத்தம் மற்றும் விரக்தி, இதற்கும் மேலாக குழந்தை வளர வளரத் தன் தவறுகளை, குற்றசெயல்களை உணர்வதால் குழந்தைக்குள் குற்றமனசாட்சி பெரிதாக வளர்கிறது. தனது குற்றத்திற்கான தண்டனையின் பயமும் வளர்கிறது. பொதுவான கடவுள் பற்றிய உணர்ச்சி ஆதாம் தேவ சாயலில் படைக்கப்பட்ட காரணத்தினால் கடவுள் உணர்வு எல்லா மனிதர்களுக்குள்ளும் வைக்கப்பட்டிருக்கிறது. இதுவே மனிதனை விலங்கினத்திலிருந்து வேறுபடுகிறது. மேலும் கடவுளை வழிபட வேண்டும் என்கிற உணர்வு இருக்கிற காரணத்தினால் ஏதோ ஒன்றை (இயற்கை சக்திகளை) மக்கள் வணங்குகின்றனர்.

இந்த உணர்வைக் கடவுளைப் பற்றிய அறிவு என்றோ உணர்வு என்றோ கூற முடியாது. ஏனெனில் தங்கள் மனதில் எழும் மூடநம்பிக்கை உணர்ச்சிகளின் அடிப்படையில் தான் பயப்படுகின்றனர். பெரும்பாலும் இந்த பயம் எதிர்மறையானது. அது விடுதலையையோ நம்பிக்கையையோ அளிக்க முடியாது.

மேலும் எல்லாருமே குற்ற மனசாட்சியினால் பயப்படுகின்றனர். மேற்கூறிய மூடநம்பிக்கையின் பயம் குற்றமனசாட்சியலிருந்து விடுவிக்க முடியாது. படிக்கவும் ரோமர் 3:10–18 உணர்வுள்ளவன் இல்லை தேவனைத் தேடுகிறவன் இல்லை, ... அவர்களுக்குத் தெய்வபயம் இல்லை.

# டாக்டர் ரே. பாமர் Dr. Ray Palmer 1808 - 1887

"அருள் நிறைந்தவர், பூரண ரட்சகர் - தேவரீரே,
ஜெபத்தைக் கேட்கவும் பாவத்தை நீக்கவும்
பரத்தில் சேர்க்கவும் வல்லவரே"

என்ற இனிய பாடலை கிறித்துவ உலகத்திற்கு தந்தவர் பாமர். 1808 ம் ஆண்டு, நவம்பர் மாதம் 12 ம் நாள் அமெரிக்காவின் 'ரோட் ஐலாண்டு' (Rhode Island) காம்ப்டன் (Little Compton) நகரில் பிறந்தார். அவரது தந்தை தாமஸ் பாமர் இந்த ஊரில் நீதிபதியாக பணி புரிந்து வந்தார். புகழ் பெற்ற சபை குருவாகவும் சிறந்த கவிஞராகவும் பிற்காலத்தில் திகழ்ந்த பாமர் தனது இளம் பருவத்தில் பாஸ்டன் நகரில் ஒரு மளிகை கடையில் பணியாற்றியவர். இளமையிலேயே சிறந்த அறிவை பெற்றிருந்த இவர், பிற்காலத்தில் 'ஏல்' (Yale) பல்கலை கழகத்தில் பயின்று 1830 ம் ஆண்டு பட்டம் பெற்று, ஒரு பள்ளி ஆசிரியராக பணி புரிய சென்றார். இக்காலத்தில் தான் அவரது கவித்திறன் வெளியானது.

1835 ம் ஆண்டு சபை குருவாக பிரதிஷ்டை செய்யப்பட்டார். Congregational Church of America என்ற மிகப் பெரிய சபையின் குருவாகவும் பணி புரிந்தார். திருச்சபையின் மக்கள் அவர் மீது பாசம் காட்டி பழகினர். எந்தவித ஆடம்பரத்தையோ, புகழையோ விரும்பாத பாமர், மிகவும் எளிமையான வாழ்க்கையை நடத்தி கடவுளின் சித்தத்தை செய்யவும் மக்களுக்காக சேவை செய்யவுமே விரும்பினார்.

பாஸ்டன் (Boston) நகரில் ஒரு நாள் தனது நண்பரான டாக்டர் லோவெல் மேசன் (Dr. Lowell Mason) என்பவரை சந்தித்தார். மேசன் ஒரு புகழ் பெற்ற இசை ஞானி. 'ஆலய வழிபாடுகளில் பாடப்படும் பாடல்' என்ற தலைப்பில் பாடல்களை புத்தக வடிவில் வெளியிடும் பணியில் ஈடுபட்டிருந்தார் மேசன். பாமரை சந்தித்தவுடன், 'இந்தப் பாடல் புத்தகத்தில் சேர்த்துக் கொள்வதற்கு நீ இயற்றிய பாடல் ஒன்றை தரமுடியுமா?' என்று கேட்டார். ஒரு வாரத்திற்கு முன் தான் எழுதிய 'அருள் நிறைந்தவர், பூரண ரட்சகர்' (My Faith Looks up to Thee, Thou Lamb of Calvary, Saviour Divine ) என்ற பாடலை தன் மேல்சட்டை பையிலிருந்து உடனே எடுத்துக் கொடுத்து விட்டார். தன் இல்லத்திற்கு சென்றப் பின் இப்பாடலைப் படித்த மேசன், ஆண்டவரின் அருளை உள்ளத்தில் மிகவும் உணர்ந்து பாமர் இப்பாடலை எழுதி, படிக்கிற மக்களும் அவரது அருளை உணரும் வகையில் அமைந்திருக்கிறதைக் கண்டு, மிகவும் சந்தோஷப்பட்டார். உடனே அதற்கு இசையை அமைத்து நமது சபைகளில் இப்பொழுது பாடப்படும் 'ஆலிவெட்' ( Olivet) என்ற ராகத்தை இப்பாடலுக்கு அமைத்துக் கொடுத்தார். உலகெங்கும் இப்பாடல் பல மொழிகளில் மொழிப் பெயர்க்கப்பட்டு 'ஆலிவெட்" இராகத்திலேயே பாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

'டாக்டர். பாமர், நீ நீண்ட ஆயுசுடன் வாழ்ந்தாலும்; மக்களுக்கென்று அரிய தொண்டு ஆற்றினாலும், நீ எழுதிய இந்தப் பாட்டின் மூலமாகத் தான் இளைய தலைமுறை உன்னை அறிந்து, புகழ்ந்து போற்றுவார்கள்' என்று உணர்ச்சி வசப்பட்டு மேசன் கூறினார். 2 கொரிந்தியர் 5:6ல் சொல்லப்பட்ட 'நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்' என்ற செய்தியை உள்ளடக்கிய இப்பாடல் கணக்கற்ற மக்களின் உள்ளத்திற்கு மிகுந்த ஆறுதலையும் மிக்க மகிழ்ச்சியையும் கொடுத்து வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

பாமர், ஒரு சிறந்த கிறிஸ்தவ பக்தர் என்றும், தன்னை முழுவதுமாக கிறிஸ்துவின் பணிக்கென்று அர்ப்பணித்துக் கொண்டார் என்றும், இவர் இயற்றிய சுமார் 40 ஞான பாட்டுகளையும், அவரது கவித்திறனையும் பேரறிவையும் அங்கீகரித்து, அவருக்கு அறிவர் பட்டம் (Doctor of Divinity) அளிக்கப்பட்டது. 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகப் பெரிய இறை மனிதர் தனது 79ம் வயதில் மார்ச் 29, 1887 ம் ஆண்டு மகிமையில் எடுத்துக் கொள்ளப்பட்டார் என்று சபை வரலாறு கூறுகிறது.

....முடிந்தது

## இம்மாத நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| 05.10.2014 | ஓய்வு நாள் பள்ளி ஆசிரியர் கூடுகை |
| 12.10.2014 | இளம் மனைவிமார்களின் ஐக்கியம் காலை ஆராதனைக்கு பிறகு |
| 19.10.2014 | குடும்ப கூடுகை காலை ஆராதனைக்கு பிறகு |
| 24.10.2014 | இரவு ஜெபம் (மாலை 07.00 முதல் 10.00 மணி வரை) |
| 01.11.2014 | ஸ்தோத்திர ஜெபம் காலை 05.00 மணிக்கு<br>மாலை 04.30 மணிக்கு ஞானஸ்நான ஆராதனை |

## சிந்தனைக்கு

● நம் கையிலுள்ள ஐந்து விரல்களும் ஒன்றுக்கொன்று பல வகைகளில் வேறு பட்டிருந்தாலும் ஒரு வேலை செய்யும் போது ஒன்றாக இணைந்திருப்பது போல விசுவாசிகள் ஒருவருக் கொருவர் வேறுபட்டவர்களாய் இருந் தாலும் திருச்சபையின் ஐக்கிய வாழ்வில் இணைந்து செயல்பட அழைக்கப்பட்டிருக்கிறோம். பிறரது பெலவீனங்களைக் கண்டு ஏளனம் செய்வதோ, குற்றப்படுத்துவதோ முதிர்ச்சி யடைந்த விசுவாசிக்கு உகந்ததல்ல. பிறரது பெலவீனங்களை ஏற்றுக் கொள்ளவும், தாங்கவும் கர்த்தர் நமக்கு பெலத்தை தந்திருக்கிறார். இதை ஏற்றுக்கொண்டு சபையின் ஐக்கிய வாழ்வில் கடவுளால் பயன்படுத்தப்பட ஆவியானவரின் ஆளுகைக்குள் நம்மை ஒப்புக்கொடுப்போம்.

● கிறிஸ்துவின் சரீரமான திருச் சபையில் கடவுள் நம்மில் எதிர்பார்க்கும் மாற்றத்தை தவிர்க்கவோ, தடுக்கவோ ஒருவராலும் முடியாது. பரிசுத்த ஆவியானவர் பரிசுத்தத்திற்காக மாற்றங்களை அனுமதிக்கிறார். மாறுதல் விரும்பிகள் எதிலும் மாற்றத்தை வரவேற்பார்கள். பழமைவாதிகளோ, **கடவுளால் நிராகரிக்கப்பட்டவர்கள்** மாற்றங்களை விரும்பாமல் பாரம்பரிய நிர்பந்தத்தினால் அதனை தவிர்க்கிறார் கள். ஆனால் தேவையானவற்றில் மாற்றத்தை ஏற்பதும் மாறாதவைகளில் விசுவாசத்தில் மன உறுதியோடு நிலை நிற்பதுமே அவசியமானது. மாற வேண் டியவற்றில் மாறாதிருப்பதும், மாறக் கூடாதவைகளில் மாறிக்கொள்ளு வதுமே பாவதன்மையின் பெலவீனம்.

**J.C. Ryle**

## ஊழிய செய்திகள்

● செப்டம்பர் 13 & 14 தேதிகளில் நம் முடைய சபையின் சேர்ப்பின் பண்டிகை மற்றும் ஆண்டு விழா ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன.

● 21.09.2014 அன்று வியாசர்பாடி எஸ்கோல் சபையின் 25ம் ஆண்டு விழா ஆராதனை சிறப்பாக நடைபெற்றது.

● 28.09.2014 அன்று தண்டலம் சபையின் சுவிசேஷ ஊழியத்தின் மூலம் பெனாலூர் கிராமத்தை சேர்ந்த 6 பேர் ஞானஸ்நானம் பெற்றனர்.

● அக்டோபர் 2 – 4 வரை நமது சபையின் குடும்ப முகாம் எண்ணூரில் நடைபெற்றன. இதில் 22 குடும்பங்கள் பங்கு கொண்டனர்.

● 02.10.14 அன்று BYF தாலந்துபோட்டி கள் நடைபெற்றன. வேத வினா–விடை போட்டியில் கோடம்பாக்கம் மற்றும் பரணம்பேடு சபைகள் வெற்றி பெற்று சுழற்கோப்பையை வென்றனர்.

● 03.10.2014 அன்று நமது சபைகளின் பெண்கள் மாநாடு சோம்பட் சபையில் நடைபெற்றது. இதில் 200க்கும் மேற்பட்ட வர்கள் பங்குக் கொண்டனர்.